Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 08 (23-11-1992) திங்கட்கிழமை ஓசை 279

## தாண்டிக்குள சாவடியில் சோதனைகள் தீவிரம்

வவுனியா சிறிலங்கா இராணுவ சோதனை முகாமில் தமிழ்ப் பயணிகள் மீதான கெடுபிடிகள் சமீப நாட்களாக அதிகரித்துள்ளன. வவுனியா நகரில் சந்தேகத்திற்குரியவர்கள் என கருதப்படும் நபர்கள் தீவிரமாக விசாரணை செய்யப்படுகின்றனர். கடற்படைத் தளபதி கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வவுனியாவில் இராணுவம், மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று வவுனியா நகர் வாசி ஒருவர் தெரிவித்தார். படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகள் இரவுப் பொழுதுகளிலும் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, வடபகுதி (3 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் வெடிகுண்டுப் பீதி பரவுகிறது

# தமிழர்கள் மீது கண்காணிப்பு தீவிரம்

## வெளியில் நடமாட மக்கள் அச்சம்

[கொழும்பு]

கொழும்பில் தொடர்ந்தும் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம் என அச்சம் நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை கொழும்பில் வாழும் தமிழர்கள்மீது சிறிலங்கா பொலிஸார் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாகவும், சிறு சந்தேகம் ஏற்படும் பட்சத்திலும் அவர்கள் கைது செய்யப்பட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரத்தில் கொழும்பில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்தும் சிறிலங்கா புலனாய்வுத் துறையினரும், பிரதம மந்திரியும் கொழும்பில் மேலும் குண்டுகள் வெடிக்கலாம் என அறிவித்துள்ளமையைத் தொடர்ந்தும் கொழும்பில் பெரும் பீதி நிலை நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து அரச காரியாலயங்களில் ஊழியர்கள் பொதுமக்களின் வருகை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், பொது விடங்களில் மக்கள் நடமாட்டம் பெருமளவில் குறைந்துள்ளதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன

இதேவேளை, கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் நடமாட்டங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், வீதிகளில் அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. மேலும் இச்சோதனைகள் அரச, தனியார்துறை ஊழியர்கள் மீதும் மேற்கொளளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு கொழும்பில் கடந்த சில தினங்களாகக் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான தமிழர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை எனவும் அறியவருகின்றது.

வடக்கிலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் கொழும்புக்கு வரும் தமிழர்களிடமிருந்துதான் ஆபத்தும் வருகிறது என்று உயர் அதிகாரிகள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### அவசர காலச் சட்ட விதிகளின் கீழ்

## கொழும்பில்வதிவோர்களைபதியுமாறு ஜனாதிபதி செயலகம் பணிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தின் கீழ் ஒரு புதிய பிரமாணம் நேற்று நள்ளிரவிலிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் புதிய பிரமாணத்திற்கமைய ஒவ்வொரு குடியிரு

ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றின் படி இப்புதிய பிரமாணம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. தென் இலங்கையில் இந்த முறை முன்னர் பொலிஸாரால் நடைமுறைப்

காட்டப்பட வேண்டும். வீட்டில் உள்ளவர்களின் எண்ணி (3 ஆம் பக்கம் பார்க்க)

### பதிவுகளால் பயனேதும்

## மாவீரர் கல்லறைகள் சுதந்திர சுடர் ஏற்றும் நெருப்புக் கிடங்குகள்

போராளிகள் தனி மனிதர்கள் அல்ல, அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள்; அந்த இனத்தின் வழிகாட்டிகள்; ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஷ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்துநிற்க வேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலம்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டேயிருக்கும்.

இவ்வாறு ''ஏன் போராளிகளின் புகழுடல்கள் புதைக்கப்பட வேண்டும்'' என்பது குறித்து விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுபற்றி விளக்குகையில்,

போராளிகளின் கல்லறைகள் மக்களின்உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகவே பயன்படும். எனவே தான் போராளிகளது உடல்களைப் புதைத்து கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலை நிறுத்த நாங்கள் விரும்புகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவை காலம்காலமாக இருந்துவந்த சம்பிரதாயம் சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றது என நீங்களும் கருதலாம். ஆனால் உங்களது பிள்ளைகளான புலி வீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத்தாக, பொக்கிஷமாக இருக்கின்றார்கள். (3 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரத்தைசிறப்பிக்கும் மின் அலங்காரக் காட்சிகள்

[யாழ்ப்பாணம்]

மைல் நீளமான வீதிகளிலும் தாய்

நேற்று நள்ளிரவிலிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் புதிய பிரமாணத்திற்கமைய ஒவ்வொரு குடியிருப்பாளரும் தங்கள் வீட்டில் தங்கியுள்ள ஆட்களின் பெயர்ப் பட்டியலை அந்தப் பகுதிப் பொலிஸ் பொறுப்பு அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பிரமாணம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தென் இலங்கையில் இந்த முறை முன்னர் பொலிஸாரால் நடைமுறைப் படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

குடும்ப அங்கத்தவர்கள் வேறாகவும் மற்றவர்கள் வேறாகவும் இந்தப்பட்டியலில்

# புலிகளின் தாக்குதலை தடுக்க போதிய அதிகாரம் இல்லை

## இராணுவத்தினர் கவலை

[கொழும்பு]

விடுதலைப்புலிகள் கொழும்பில் தாக்குதல்கள் நடத்தலாம் என முன்கூட்டியே தெரிந்திருந்தும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தமக்கு போதிய அதிகாரம் வழங்கப் படவில்லை என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புலிகள் புதிய புதிய யுத்தியைக் கையாண்டு தாக்குதல்களை நடாத்தி வருவதால் பொதுமக்கள் தான் விழிப்புடன் இருந்து அவற்றைத் தடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# பதிவுகளால் பயனேதும் கிட்டப் போவதில்லை

## பி. பி. ஸி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கு விஷேட அடையாள அட்டை வழங்க சிறிலங்கா பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகின்றனர்.

குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படை தளபதியின் கொலைச் சந்தேக நபர் கொழும்பு பொலிஸ் நிலையம் ஒன்றில் பதிவு செய்துள்ளமையை குறிப்பிட்ட சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் பொலிஸில் பெயர் பதிவு செய்யும் முறை பிரயோசனம் அற்றது என சுட்டிக்காட்டினர்.

எனவே இவர்களுக்கு புதிய அடையாள அட்டை ஒன்றை வழங்குவதன் மூலம் இவ்வாறான தாக்குதல் நடாத்துபவர்களை கண்டு பிடிக்க முடியுமா என்பது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகி

(3 ஆம் பக்கம் பார்க்க)

[யாழ்ப்பாணம்]

மாவீரர் வார வளைவுகள், பந்தல்களில் இம்முறை மின் அலங்காரங்கள் சிறப்பு அம்சமாக அமைந்து காணப்படுகிறது. மாவீரர் நினைவு வளைவுகள் நினைவுப் பந்தல்கள் என்பனவற்றிற்கும் சூழ உள்ள பகுதிகளுக்கும் அமைக்கப்பட்டுள்ள மின் விளக்குகளால் யாழ். குடாநாடு முழுவதும் ஒளி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சுற்றிலும் பெருமளவில் மின் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியினையொட்டிய சுமார் ஐந்து மைல் நீளமான வீதிகளிலும் மின் அலங்காரம் செய்யப் பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் திருமலைத் தாய் பெற்றெடுத்து விடுதலைப் போரில் வீரச்சாவெய்திய 508 மாவீரரின் உருவப் படங்கள் பெரியதோர் நினைவுப்பந்தலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

[3ஆம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவு தளம் மாதிரி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணிப்பகுதியில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ தளத்தை ஒத்த அமைப் பொன்று உருவாக்கப்பட்டு அதன் மீதான தாக்குதல் நடாத்துவது போன்ற மாதிரியொன்று பரந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 200 மீற்றர் நீளமுள்ள பகுதியில் இம் மாதிரி அமைக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியினை ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

# இன்று மீட்புநிதி கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு இன்று பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப் படவுள்ளதாக மீட்புநிதி நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதி நாவலர் கலாசார மண்டபத்

[3ஆம் பக்கம் பார்க்க]

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புலிகளுடன் அரசு பேசவேண்டும்

## சிறிலங்கா முஸ்லிம் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நிலவும் யுத்தத்தை முடிவுக்குகொண்டு வரும் வகையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் பிரட்மன் வீரக்கோனும், எஸ். தொண்டமானும், ஏ. சி. எஸ். ஹமீத்தும் ஒன்றிணைந்து ஓர் இணக்கமான பேச்சுவார்த்தையைப் பகிரங்கமாக நடாத்துவதற்கு அரசு துரித ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கமுன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் அமைப்பாளரான எம் எச். சேகு இஸ்ஸைதீன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியல் யோசனை ஒன்றை முன்வைத்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டுமெனவும் தமிழீழத்துக்கு மாற்றீடான யோசனையை அரசாங்கமும், சுதந்திரக் கட்சியுமே முன்வைக்க வேண்டுமெனவும்கோரியுள்ளார்.

இந்நிலையில் யார் தீர்வை முதலில் முன்வைப்பது என்று பார்த்துக்கொண்டிருப்பது தவறானதாகும்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாதிக்கப்பட்டு வரும் அப்பாவிப் பொதுமக்களினது நன்மையைக் கருத்தில் எடுத்து காத்திரமான ஒரு ஆலோசனையைத்துணிவோடு முன்வைக்க வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கிற்கு தனித்தனி சமஷ்டி அமைப்பு

## முஸ்லிம் எம். பிககள் ஆதரவு

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தனித்தனி சமஷ்டி அமைப்புகளை ஏற்படுத்தும் யோசனைக்கு எல்லா முஸ்லிம் எம். பிக்களும் ஆதரவுதெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி உட்பட மற்றைய கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்றஉறுப்பினர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

மேற்படி யோசனைக்குக் கட்சிகள் ஆதரவளிக்கும் பட்சத்தில் தாமும் ஆதரவளிப்பதாகவும் முஸ்லிம் எம். பிக்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

# மேலும் 52 தமிழ் இளைஞர் தென்பகுதியில் கைது

நீர்கொழும்பு-கொழும்பு பகுதியில் மேலும் 52 தமிழ இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்கள் கடற்படை தளபதி கொலையை தொடர்ந்தே கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் அனைவரும் வடக்கு, கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு தங்க இடம் கொடுத்த பலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 46 இளைஞர்கள் நீர்கொழும்பு பகுதியிலும் மற்றைய 6 இளைஞர்கள் கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வடமராட்சிப் பகுதியில் விமானங்கள் நோட்டம்

(வடமராட்சி)

சிறிலங்கா அரசுக்கு சொந்தமான மூன்று பொம்மர் விமானங்கள் வடமராட்சிப் பகுதியை அரைமணி நேரம் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றன.

வான் பரப்பில் ஒரே அணியாக வந்த மூன்று பொம்மர்கள் முதலில் 9 30மணியளவில் தொண்டமனாறை மையப் பகுதியாக வைத்து வட்டமிட்டன.

பின்னர் 9 40 மணிக்கு வல்வெட்டித்துறையை மையமாக வைத்து நோட்டமிட்ட பின்னர் 9.50 மணிக்குப் பருத்தித்துறையை மையமாக வைத்து நெல்லியடி, தும்பளை, இன்பருட்டிப் பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்டன.

பொம்மர்களைக் கண்ட மக்கள் மறைவிடங்களையும், பதுங்கு குழிகளையும் நாடி ஓடினர். பருத்தித்துறையில் ஐந்து தடவைகளுக்குமேல் நோட்டமிட்டுவிட்டுப் பொம்மர்கள் பலாலியைநோக்கிச் சென்றன.

# கிருலப்பனை பகுதியில் ஏ. கே. 47 மீட்பாம்

[கொழும்பு]

திம்பிரிகசாய சம்பவம் தொடர்பாக சோதனையில் ஈடுபட்ட பொலிசார் கிருலப்பனை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஏ. கே. 47 ரகரைபிள் ஒன்றை கண்டெடுத்துள்ளனர். திம்பிரிகசாய பகுதியில் கடந்த வெள்ளியன்று நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஜனாதிபதியின் செயலாளரான கே. எச் ஜே. விஜேதாசாவின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பலத்த காயமடைந்தது தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் பொலிசார் கிருலப்

[3ஆம் பக்கம் பார்க்க]

# அக்கரைப்பற்றுப் பகுதியில் 730 தமிழ் இளைஞர் கைது

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுப் பகுதியை கடந்த புதன் கிழமையன்று சுற்றிவளைத்த சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் 730 தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

பலமணி நேரம் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டபின் 28 பேர் முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும்ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**வீணே தறிக்கும் மரங்களைத் தடுக்க-நாம் விழித்தெழ வேண்டாமா?**

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விளம்பரம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஸ்ரீ காந்தா அச்சகம்- புத்தகசாலை 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (3640)

## எம். ஜி. ஆர். திருமண சேவை

1960ஆம் ஆண்டுக்கு முன்பு பிறந்த பெண்களுக்கு மணமகன்கள் தேவை, தாரம் இழந்த மணமகன்கள், மணமகள்களும் தேவை. தொடர்பு: வே. புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை. (3362)

## உடன் விற்பனைக்கு

பிறிமா பிறவுண் + கறுப்பு பேட்டுக் குஞ்சுகளும் கோழிகளுக்கான மருந்துகளும் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3223)

## மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம (சைவம் றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

## வினாத்தாள்கள்

எமது நிறுவனத்தால் ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை நடாத்தப்பட்ட 3-ம் தவணை வினாத்தாள்களையும் (சகல பாடமும்) ஆண்டு 6 அனுமதி வினாத்தாள்களையும் ஆண்டு 5 புலமைப் பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய

## மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

## தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5400)


## முதலாவது பிறந்தநின வாழ்த்து (23.11.92)



## செல்வன் விபீஷானந்தன்

கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த இரவீந்திரன் கலைச்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வன் விபீஷானந்தன் தனது முதலாவது பிறந்தநினத்தை 23-11-92 இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சித்தப்பாமார், ஜேர்மனியில் இருக்கும் மாமா, டென்மார்க்கில் இருக்கும் சித்தி- சித்தப்பா, தம்பி கிஷோக் மற்றும் உற்றார், உறவினர்கள் திருநகர் முத்துமாரி அம்மன் அருளால் சகல கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள். [சி-5427]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# கலை, வர்த்தகக் கல்லூரி C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை

## A/L 94 புதிய பிரிவு

## சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ | 8—9 |
| பொருளியல் | — திரு. உதயன் | 9—10 |
| வர்த்தகம் | — திரு இரட்ணம் | 7—8 |
| | | 10—11 |
| இந்து நாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் | 11—12 |
| அளவையியல் | — திரு. சயந்தன் | 1—2 |
| தமிழ் | — திரு. தங்கராசா | 8—9 |
| புவியியல் | — திரு வேலாயுதபிள்ளை | 12—1 |
| அரசியல் | — திரு. பஞ்சு | 7—8 |
| கிறிஸ்தவ நாகரிகம் | — செல்வி சாந்தி | 11—12 |

**ஆரம்பம்: 29. 11. 1992**

குறிப்பு:
1. முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
2. பிரிவு I க்குரிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
3. பிரிவு II புதிய அலகில் இருந்து ஆரம்பமாகும்.

★ விவரங்களுக்கு நேரில்.

- நிர்வாகி.

(சி/5412)

## உன் நினைவூட்டும் 31-ம் நாள்

ஈழ மண்ணில் உதயம் 02 | 4 | 1974



ஈழ மண்ணிற்காக அஸ்தமனம் 23 | 10 | 1992

## 2-ம் லெப். இறைகுமார் (நசார்)

(குமாரசாமி தவராசலிங்கம்)

மணலாற்றில் மண்கிண்டி இராணுவ முகாமிற்கு அண்மையில் இருந்த காவலரண்கள் தகர்ப்பில் வீரமரணத்தை அணைத்துக் கொண்டார்.

மண் மீட்கும் போர் தொடர<br>
மண்கிண்டி மலையிலே குருதியை சிந்தியே<br>
மண்ணை விட்டு மறைந்த உன் உடல்தான்!<br>
எண்ணங்கள் என்றும் உறவாடும் அதனால்<br>
விண்ணிலிருந்து பார்ப்பாய் விடியும் நம்தேசத்தை.

23-11-1992 இன்று திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்துக்கு சகபோராளிகளும், அன்றைய தினம் அனுதாபம் தெரிவிக்க வந்தோர்களும், உதவி நல்கியோர்களும் இன்றைய நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

உன்பிரிவால் கண்ணீர்

# நினைவு கூருகின்றோம் ...

## 1992-11-23

1985-ம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை- திரியாயில் வீரச்சாவெய்திய-

தருமன் (விஜயநாதன் சத்தியநாதன்- அன்புவழிபுரம்- திருக்கோணமலை)

1986-ம் ஆண்டு பருத்தித்துறையில் தவறுதலான கைக்குண்டு வெடிப்பில் எமைப்பிரிந்த-

பில்லா (அஸ்பர்ராசா வின்சன்ட் பெனடிக்ற்- வெற்றிலைக்கேணி)

1987-ம் ஆண்டு திருக்கோணமலையில், இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2- தமிழர்கள்.

1989-ம் ஆண்டு கிளிநொச்சி- திருவையாறுப்பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

(திருவையாறு அரசியல் பொறுப்பாளர்)

கமல் (பாலச்சாமி சிவகுமார்- இல. 75, திருநகர்- கிளிநொச்சி)

யாழ். கரவெட்டி மண்டான் பகுதியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

அல்விஸ் (சந்திரரவி திருச்செல்வம்- கரணவாய் தெற்கு, கரவெட்டி- யாழ்.)

அம்பாறை கல்முனைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 3- தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். செயலகக் கணக்காளரான தமிழ்ப்பொதுமகன்.

1990-ம் ஆண்டு மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் மீதான கரும்புலித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கரும்புலி-

லெப். கேணல் போர்க் (மயில்வாகனப்பிள்ளை அரசரத்தினம்- ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை- வவுனியா)

இதே முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

நியூட்டன் (குணசேகரம் ஜெயரட்ணம்- 178 இந்திரஜித் வீதி, வட்டக்கச்சி- கிளிநொச்சி

2-ம் லெப். மாரியாச்சி (அருள்மொழி (சிந்தனா) குணசிங்கம்- 16/02, பாரதி ஒழுங்கை- யாழ்ப்பாணம்.)

சுதா (சுதர்மினா [சுதனா] செல்வரட்ணம் மாமூலை, முள்ளியவளை முல்லைத்தீவு)

கப்டன் ரசாத் ரசாக் (சிவசுப்பிரமணியம்-சுரேஸ்குமார் இல: 63, கணேசபுரம் - கிளிநொச்சி)

விஜி [நவரத்தினம், நிக்சன், மதன்ராஜ்-136, ஜெயந்திநகர்-கிளிநொச்சி)

லோறன்ஸ் (தவனேஸ்வரன்-பெரியமடு, புளியங்குளம்- வவுனியா)

மேஜர் கரன் [நல்லதம்பி நடராசா - செல்வபுரம் வடக்கு, வவுனிக்குளம்-)

லெப்.வர்ணன் [இராசரத்தினம் இராமலிங்கம்- நெட்டாங்கண்டல்- உயிலங்குளம்-மன்னார்]

லெப்.கோபு (மரியநாயகம் கிறிஸ்ரிகுமார் - பெரிய தம்பனை -வவுனியா]

லெப்.தில்லை [பொன்னுத்துரை பத்மநாதன்- சகாயவீதி பேப்பங்குளம், அடம்பன் மன்னார்]

அனுமதி வினாத்தாள்களை யும் ஆண்டு 5 புலமைப் பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (3686)

## கதகளி ஆடல்

(யாழ்ப்பாணம்)

கலைஞர் வேல் ஆனந்தன் ஆடலமைப்பில் நாட்டியக் கலைமணி பாவிலுப்பிள்ளையின் சென்ற் அளிக்கும் 'கதகளி ஆடல்' வரும் 28ஆம் திகதி பி.ப 2-00 மணிக்கு சுண்டிக்குளி மகளிர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி கலைக்கோவில் கீழைத்தேய ஆடல், ஆடற்கலை நிறுவனம் இந்நிகழ்ச்சியை அளிக்கின்றது.

## பரதநாட்டியம் நூல் வெளியீடு

(சாவகச்சேரி)

ஆரம்ப அழகியற் கல்வி மாணவர்களுக்கு மட்டுமன்றி பரதக் கலையை அறிந்து இரசிக்க விரும்பும் பெரியவர்களும் பயன் பெறக் கூடிய முறையில் இந்நூல் ஆக்கப்பட்டிருக்கிறது என்று பரதநாட்டியம் அடிப்படை அறிவும், ஆரம்ப விளக்கமும் என்னும் நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கவிமாமணி ந வீரமணி ஐயர் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி மகளிர்மகாவித்தியாலயமண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பல்கலைக்கழக மெய்யியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், சிவானந்தமூர்த்தி, பிரதிக் கல்விப்பணிப்பாளர் [நடனம்] செல்வி நளாயினி இராஜதுரை, கோப்பாய் சிவம், நீதிபதி மு. திருநாவுக்கரசு, பிரதிக்கல்விப் பணிப்பாளர் [சங்கீதம்] த. கணபதிப்பிள்ளை கல்வயல் வே. குமாரசுவாமி உட்பட பலரும் உரையாற்றினர்.



## கப்டன் ரஷாத்

(சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார்)

வீரஜனனம் 1973.03.31

வீரச்சாவு 1990.11.23

பலகளம் சென்று பகைமுடித்த வீரனே
கொக்காவில்சென்று கொடும்பகைவர்கதை முடித்தாய்
மாங்குளச்சமரில் மாவீரம் காட்டி மாவீரனாகி
மங்காப்புகழ் படைத்தாய், ஆண்டுகள்
இரண்டு கழிந்தாலும் அழியவில்லை உன்புகழ்
நம் தாயகத்தில்

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களையும் இன்று நினைவு கூருகின்றோம்.

கணேசபுரம்,
கிளிநொச்சி.
(3682)

அன்பு அம்மா, அண்ணாமார்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

அநுதாபம் தெரிவிக்க வந்தோர்களும், உதவி நல்கியோர்களும் இன்றைய நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

உன்பிரிவால் கண்ணீர்
உதிர்த்து நிற்கும்
அம்மா, அப்பா, சகோதரிகளும்,
மருமக்களும்.

மிருசுவில் வடக்கு,
(சி-5445)

22 - 07 - 1990இல் முரசுமோட்டையில்
வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட
வீரவேங்கை முத்துவின்

## 2-ம் ஆண்டு நினைவலைகள்

பெற்ற அன்னையின்
மடியில்
27 - 12 - 1969

தமிழீழ அன்னையின்
மண்ணின் மடியில்
22 - 07 - 1990



## வீரவேங்கை முதது

(தெய்வேந்திரம் மகேந்திரன்)

காரைநகர்

காரைமண் பெற்றெடுத்த வேங்கையே மகேந்திரா
களத்திலே காவியம் படைக்க விரைந்தாய்
உனது இருபதாவது வயதினிலே புலிப் பாசறையிலே
பயிற்சி எடுத்து புலிவீரன் முத்து ஆனாய்
முத்து அன்று முரசுமோட்டையிலே மண்ணுக்காக
உன் உயிர் நீத்தாயே
மண்ணிலா எங்கள் வீரன் முத்து உன்னைப் புதைத்தோம்
இல்லையே! எங்கள் தமிழீழ நெஞ்சங்களின்
மனங்களில் அல்லவா விதைத்தோம்!
இதயம் இருக்கும் வரை உனது நினைவிருக்கும்
எம் இனம் இருக்கும்வரை உனது உணர்விருக்கும்
மாவீரன் மரணத்திலும் உனது புகழ்கண்டோம்.!

வாழ்க தமிழ்! வளர்க தமிழீழம்
''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!''

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை, [3685)

குடும்பத்தினர்,
நண்பர்கள்

தம்பனை-வவுனியா]

லெப்.தில்லை [பொன்னுத்துரை பத்மநாதன்-சகாயவீதி பேப்பங்குளம், அடம்பன் மன்னார்]

மேஜர் பிரபா (தியாகராசா தேவகிருஸ்ணகுமார்-செட்டிகுளம்-வவுனியா)

நம்சின் (தமிழ்ச்செல்வன் - பூவரசங்குளம்-வவுனியா)

லிங்கராஜ் [சுப்பிரமணியம் கதிர்காமநாதன் - மதகுவைத்தகுளம்-வவுனியா)

ஆனந்தராஜ் நாகராசா தம்பிராசா - சின்னசாளம்பன், ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு]

இம்றான் (வேலுப்பிள்ளை குணதர்மன்- 3-ம்கண்டம் முத்தையன்கட்டு, முழங்காவில் - மன்னார்)

2-ம் லெப்.யேசு (முருகேசு மகேந்திரன் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை - யாழ் ]

2-ம் லெப்.தும்பன் (துரைராசா பாலராசா(பாபு) தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்-யாழ்)

கோணேஸ் (சூசைப்பிள்ளை ஜெயசீலன்-நெளுக்குளம் வவுனியா)

லெப்.றெ பேட் [சம்பூரணம் ஜெயசிங்கம் அன்ரன்-முருங்கன்பிட்டி-மன்னார்]

2.ம் லெப்.ரஞ்சன் [சேவியர்-மன்னார்]

கப்டன்.எழில் (தர்மலிங்கம் செல்வராஜா- இரத்தினம் பண்ணை, உருத்திரபுரம் கிழக்கு-கிளிநொச்சி)

மாங்குளம் சிறிலங்காப்படை முகாம் தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

2-ம் லெப் குமரன் [பொன்னையா சிவசக்தி-நெளுக்குளம்-வவுனியா]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் - கொல்லப்பட்ட கோப்பாவெளி, ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1991-ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

புவனன் (சி. புவனேந்திரன் - கோயில்போரதீவு மட்டக்களப்பு)

இதே ஆண்டு எதிர்பாரத விதமாக ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த-

புனிதன்-குளியா [பாலசிங்கம் சிவானந்தன்-திருமலை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/5443]

### சிந்தனைக்கு

மதிநுட்பத்தை மட்டுமே நம்பி வாழ்வதில், அடங்கியுள்ள ஆபத்துக்களை மனதிற்கருதுவதே மதி நுட்பத்தின் பொறுப்புக்களில் ஒன்று.

- லூயிஸ் மம்ஃபோர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 23-11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அஷ்ரப்பின் அபிலாசை

'இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது பிரிட்டிஷ் மக்கள் செய்தது போல. இன்றைய போர் சூழ்நிலையில் இலங்கையிலும் அவசரகால நிலை அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்' இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.எம். அஷ்ரப் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

திரு. அஷ்ரப்பின் கோரிக்கை சிங்கள அரசாங்கத்தின் மீது அவர் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துவதாக இருக்கலாம். ஆனால் சிங்கள அரசியற் கட்சிகளினதும், தலைவர்களினதும் உணர்வுகளையும், அபிலாசைகளையும் அவர் புரிந்து கொள்ளாமையைக் காட்டுவதாகவே உள்ளது.

பிரிட்டன்அரசியற் கட்சிகள்தமதுதேசிய நலனுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் அச்சுறுத்தல் வந்த போது அதைஉணர்ந்துகொண்டு யுத்தகால மந்திரி சபையையும், தேசிய அரசாங்கம்ஒன்றையும் நிறுவியன. தமக்குள் இருந்தமுரண்பாடுகளைத் தவிர்த்து போரில் வெற்றிபெற வேண்டும் என்ற குறிக்கோள் ஒன்றுடனேயே செயற்பட்டன. அத்தோடு, யுத்த காலத்திற்குப் பொருத்தமான பிரதமராக வின்சன் சேர்ச்சிலையும் தெரிவுசெய்தனர். இதற்கு பிரிட்டனில் இருந்த அரசியற் கட்சிகளின் பரந்த மனப்பான்மையும், தேசிய நலனில் அவை கொண்டிருந்த அக்கறையுமே காரணமாக இருந்தது. அதாவது, யார் ஆட்சியில் இருப்பினும் தேசிய நலன் என்பதே அவர்களின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது.

ஆனால், சிங்கள ஆட்சியாளர்கள் தேசிய நலனை விட ஆட்சி அதிகாரத்திலும், அதிகாரப் போட்டியிலுமே அக்கறை கொண்டுள்ளனர். அவ்வாறில்லாமல் தேசியநலனில் இவர்கள் அக்கறை கொண்டிருப்பார்களேயானால், இலங்கையில் இன்று இவ்வாறான தொரு ஆயுதப் போராட்டம் உருப் பெற்றிருப்பதற்கான வாய்ப்புக்களே தோன்றியிராது.

இலங்கையில் தமிழர் இன்று ஆயுதப்போராட்டம் நடத்துவதற்கான [illegible]

# திருமலை அகதிமுகாமில் தொற்று நோயால் அவதி

(வவுனியா)

திருக்கோணமலையில் தங்கியுள்ள இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அகதிமக்கள் கடும் நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

திருமலையில் உள்ள அலெக்ஸ்தோட்டம் அகதிமுகாம் உட்பட அனைத்து முகாம்களிலும் வாழும் அகதிகள் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்மை, வயிற்றோட்டம், மலேரியா ஆகிய நோய்கள் குறிப்பிட்ட முகாம்களில் கடுமையாகப் பரவி வருவதாகவும் சுகாதார சீர்கேட்டினாலே இந்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம்முகாம்களில் பலர் மரணமடையும் நிலையில் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## யாழ். மறை மாவட்ட நிர்வாக உறுப்பினர் நியமனம்

யாழ். மாவட்ட ஆயராக கடமையேற்றுள்ள ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 12 - 11 - 92 இல் தனது நிர்வாகக் குழு உறுப்பினர்களாக நால்வரை நியமனம் செய்துள்ளார்.

யாழ் மறைவட்ட குரு முதல்வராக (VICAR GENERAL) அருட் திரு. எஸ். ஜே. இம்மனுவல் அடிகளாரையும், கருவூல அதிகாரியாக (PROCURATOR) அருட்திரு. பி. இருதயதாஸ் அடிகளாரையும், சமயத்துறைநடுவராக (CHANCELLOR) அருட்திரு. ஜே. பி. ஈ. செல்வராசா அடிகளாரையும், ஆயரின் செயலராக (PERSONAL SECRETARY) அருட்திரு. ரீ. ஏ. தவராஜசிங்கம் அடிகளாரையும் நியமனம் செய்துள்ளார் என யாழ். பேராலயம் தெரிவித்துள்ளது. [17]

## இலவச வகுப்புகள்

"சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றும் இளைஞர்கள் நாட்டில் உருவாக வேண்டும்" தனக்காக வாழாது மனித சேவையே தெய்வவழிபாடாகக்கொண்ட சுவாமி விவேகானந்தர் போன்ற வீர இளைஞர்களை இந்து மன்றம உருவாக்கும் முயற்சி போற்றவேண்டியதாகும்"

அண்மையில் கல்வயல் இந்து இளைஞர் மன்றத்தினால் இலவசமாக நடாத்தப்படும் ஆண்டு- 5புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து பண்டிதர் க. வேலுப்பிள்ளை அவர்கள் உரையாற்றினார்.

கல்வயல் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடந்த மேற்படி நிகழ்வைத் தொடர்ந்து அரிமா சமூகத்தின் சார்பில் ஆயுர்வேத டாக்டர் பே. பிலிப்ஸ் அவர்கள் கலந்து கொண்டுமரம் நாட்டுவைபவத்தை நடாத்தி வைத்தார்.

## மாவீரர் கவிதை நூல் வெளியீடு

(வடமராட்சி)

நடைபெற்று வரும் மாவீரர் நாளையொட்டி கரணவாய் சிற்றூர் மக்கள் மாவீரர்களே! என்று விழித்து கவிதை நூல் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். (யோ)

## விஞ்ஞானமன்ற மாநாடு

யாழ்ப்பாண விஞ்ஞான மன்றத்தினால் அடுத்த வருடம் நடத்தப்பட இருக்கும் மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட உள்ள ஆய்வுக் கட்டுரைகள், சுவரொட்டிகள் கண்காட்சிப் பொருள்கள் என்பனவற்றினை உறுப்பினர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்குமுன்னர் ஒப்படைக்கும்படி யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது

## கொழும்பு சென்றது

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற 'குமாரி' கப்பல் நேற்று பிற்பகல் கொழும்பு நோக்கிபுறப்பட்டது. இக்கப்பலில் கொழும்பு மற்றும் வெளியூர்களுக்கான தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டன,

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் மரினால் கப்பல் இன்று 23 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். (யோ)

## மாவீரர் வார

கோண்டாவில் மாவீரர் நினைவுப் பந்தலில் போராட்டத்தைச் சித்தரிக்கும் நிழல் உருவங்கள் வைக்கப்பட்டு மின் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

குருநகர் பகுதியில் பாரிய ரோந்துப் படகின் அமைப்பில் முகப்பைக் கொண்ட பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்வேறு வர்ண வலைகளால் அப்பகுதி அலங்கரிக்கப்பட்டுள்ளது. படகுகளும் அலங்கரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## ரோந்துப் படகு

நேற்று காலை 6.30 மணியளவில் சிறிலங்கா கடற்படையின் ரோந்துப் படகொன்று பாசையூர் - குருநகர் கடற்பிராந்தியத்தில் முகத்துவாரக் கட்டைப் பகுதிக்கு வந்ததை அடுத்து கரையோரக் குடியிருப்புகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

சில நிமிடங்கள் வரை அப்பகுதியில் நின்ற மேற்படி ரோந்துப் படகு எதுவிதத் தாக்குதல்களையும் நடத்தாது திரும்பியதை அடுத்து நிலைமை சீரடைந்தது.

அப்பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் கரைக்கு வந்த தன் பின்பாக ரோந்துப் படகு வந்து சென்றதனால் எதுவித தாக்குதல்களும் நடத்தப்படவில்லை.

## மாவீரர் கல்லறைகள்

பல்லாயிரக்கணக்கான இப் பொக்கிஷங்கள் வெறும்நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும்இருக்கக்கூடாது. இவை பொருள் வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

இது ஒரு புறமிருக்க எமது சகதோழர்கள் சிலரது வீர மரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதிக்கின்றன. அதாவது பெற்றோரோ, உடன் பிறந்தவர்களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழநின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும் கூட அப்போராளியைப் பெற்றெடுத்த - சீராட்டிவளர்த்த தாய், தந்தையரோ அல்லது உடன் பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்டச் சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும், நாளை இப்

## அணி திரண்டொரு பரணி பாடுவோம்!

இறந்தகால நிகழ்வு இவைகளால்
ஏது பயனென எண்ணி நழுவினும்
மறைந்த தமிழரின் மாண்பை மீட்டிட
மலர்ந்த புலிப்படை வீரம் புரிவதும்
சிறந்த போர் முறையோடு அந்நிய
சிங்களப்படை தன்னைச் சாய்ப்பதும்
அறிந்து ஓர் முறை அவரை வாழ்த்திட
அஞ்சி நிற்பவர் அருமைத்தமிழரோ?

கடலில் எதிரியின் கலங்கள் தகர்க்கையில்
கனலில் எரிந்துடல் அலையில் கரைந்ததும்
உடலம் சிதறியே உயிர் பிரியினும்
ஊர்தியோடு போய் முகாம் தகர்த்ததும்
விடலை வயதினை எட்டு முன்னர் மண்
விடுதலையிலே வேட்கை கொண்டதும்
படையலாய் அவர் தம்மை ஈந்ததைப்
பாடிடும் திறன் யானறிகிலேன்

தமிழர் கூட்டமே தமிழர் கூட்டமே
தரணி மெச்ச நாம் நிமிர்ந்து வாழவே
இமைகள் போலெமைக் காத்த வேங்கைகள்
இனிய கனவினை நனவு பண்ணுவோம்
அமுதமாம் தமிழ் ஈழம் மீட்கவே
அணிதிரண்டொரு பரணி பாடுவோம்
சுமை சுமந்த மாவீரர் தாகமாய்
சுதந்திரத் தமிழ் ஈழம் வெல்லுவோம்.

- நிலா தமிழின் தாசன்

## மாவீரர் பெயரிலான வீதித் திறப்புவிழா

(பூநகரி)

மாவீரர்வாரத்தையொட்டி பூநகரி பிரதேசத்தில் இன்று வீதித்திறப்புவிழா நடைபெறும் இடங்கள்.

காலை 9.00 மணியளவில் செம்பன்குண்டு பத்தினிப்பாய் பகுதியிலும் காலை 10.00மணியளவில் தம்பிராய் பகுதியிலும் காலை 11.00 மணியளவில் செல்லபுரம் பகுதியிலும் பிற்பகல் 2.00 மணியளவில் ஆலங்கேணி பகுதியிலும் பிற்பகல் 3.00 மணியளவில் நல்லூர் பகுதியிலும் பிற்பகல் 4.00 மணியளவில் சாமிப்புலம் பகுதியிலும் மாவீரர் பெயரிலான வீதிகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

## கோட்டரீதியாக 3-ம் நாள் மாவீரர் வார கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளை முன்னிட்டு இன்று 3-ம் நாள் கோட்ட மட்டத்தில் நடைபெறும் கூட்ட விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

வலிகாமம் கோட்டத்தில் சங்கானை வட்டத்தில் வடக்கம்பாரை அம்மன் கோவிலிலும் தெல்லிப்பழையில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலிலும் இரவு 7.30மணியளவில் கூட்டம் நடைபெற உள்ளது.

தென்மராட்சிக் கோட்டத்தில் சரசாலை கமலாசினி வித்தியாலயத்தில் சாவகச்சேரி வட்டப்பொறுப்பாளர் [illegible] சாலையில் பனை வட்டப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையிலும் இரவு 7.00 மணியளவில் கூட்டம் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை கொற்றாவத்தை பாடசாலையில் எழிலன் தலைமையிலும் கூட்டம் நடைபெறும்.

தீவகம் கோட்டத்தில் அரியாலை திறந்த வெளியரங்கில் இரவு 7.30 மணியளவிலும் கடற்புலிகளினால் வலிகிழக்கில் பாஷையூர் விளையாட்டு மைதானத்திலும் வடமராட்சி வடக்கு வட்டத்தில் முனை தேவாலயத்திலும் கிழக்கு வட்டத்தில் நாகர்கோவில்

தோன்றியிராது.

இலங்கையில் தமிழர் இன்று ஆயுதப்போராட்டம் நடத்துவதற்கான முழுப்பொறுப்பும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களையேசேரும். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்வதற்காகவும், கைப்பற்றிய அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் இவர்கள் கைக்கொண்ட இன ஒடுக்கல் நடவடிக்கைகளே தமிழர்கள் ஆயுதப்போராட்டம் நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. அதாவது தமிழர் ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டிய தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தம் சிங்கள அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு விடுதலைப் புலிகள் பொருத்தமான தலைமைத்துவத்தை வழங்கினார்கள் என்பதே நிதர்சனம்.

ஆனால், சிங்கள ஆட்சியாளர்கள் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பின்னரும், அது பெருவளர்ச்சி கண்ட பின்னரும் கூட பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவில்லை. 'வெல்ல முடியாத யுத்தம்' என பலராலும் இன்று வற்புறுத்தப்படும் வேளையிலும், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அவர்கள் அக்கறையாக இல்லை. இவை 'தேசிய நலனில்' அக்கறையாகவுள்ள கட்சிகளாக இருப்பின் குறைந்தது பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தமது தீர்வுத் திட்டத்தை இக் கட்சிகள் முன் வைத்திருக்கலாம். ஆனால், தீர்வுத் திட்டம் எதையும் முன் வைத்தால் அதுவே தமக்கு எதிரான பிரசார ஆயுதமாக பயன்படுத்தப்படும் என்றும், அதனால், தமது ஆட்சி பாதிக்கப்பட்டு விடுமோ அன்றி தாம் ஆட்சியைப் பிடிப்பது பாதிக்கப்படுமோ என அஞ்சும் சிங்களக் கட்சிகளை தேசிய அரசு அமைக்குமாறு அஷ்ரப் கோரியிருப்பது அவரது கற்பனை வளத்தைக் காட்டுவதாகவே உள்ளது.

தமது கட்சிக்குள்ளேயே தலைமைத்துவத்திற்கு பெரும் வெட்டுக் குத்துக்களிலும், கழுத்தறுப்புக்களிலும் ஈடுபட்டு வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், தமது ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்த நாட்டின் தேசிய வளத்தையும் தமது இனத்தையுமே அழித்துவிட தயாராக உள்ள பிரேமதாசா அரசாங்கத்திடமும், அவர்கள் கற்பனையிலும் உதிக்காத தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையை அஷ்ரப் விடுத்தமையானது தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அவரின் ஆற்றாமையின் வெளிப்பாடே ஒழிய வேறில்லை.

என்று விழித்து கவிதை நூல் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். (யோ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர்கள், திரிசாரணர்கள், சாரண ஆசிரியர்கள், குழு சாரண ஆசிரியர்கள் மற்றும் உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 00 மணிக்கு யாழ் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலையத்தில் நடைபெற உள்ளது, அதில் சகலரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## தாண்டிகுளம்

விருந்து தாண்டிக்குளம் சோதனை முகாம் ஊடாக தென்பகுதி நோக்கிச் செல்வோர் இராணுவப் புலனாய்வாளர்களால் தீவிரவிசாரணைக்குட் படுத்தப்படுகின்றனர். இப் பயணிகளின் பொருள்கள் யாவும் கடும் சோதனைக்குட் படுத்தப்படுகின்றன. (தி)

## கொழும்பில்

க்கை கூடினாலும் குறைந்தாலும் பொலிஸ் அதிகாரிக்கு அறிவிப்பது அவசியமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பிரமாணங்களில் கூறப்படும் கடமைகளிலிருந்து ஒருவர் தவறினால் அவர் குற்றவாளியாகக் கருதப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காக்கப்பட்டுள்ளது. படங்களும் அலங்கரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரிப் பகுதி, இணுவில் ஆஸ்பத்திரியடி, கல்வியங்காடு மூன்றாம் கட்டையடி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களிலும் பெருமளவில் மின் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றை ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்வையிடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. [17], [21]

## கிருலப்பனை

பனை பகுதியில் இருக்கும் வீடொன்றின் குசினிக்குள் சேட் ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் ஏ. கே 47 ரகத் துப்பாக்கி ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இத்துப்பாக்கியிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டமைக்கான தடயங்களும் காணப்பட்டு உள்ளன.

இது தொடர்பாக ஆணும் பெண்ணுமாக இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பதிவுகளால்

றது.

இதே வேளை கடற்படைத் தளபதியின் மீது குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட நபர் வாகன அனுமதிப் பத்திரம் பெற்று வைத்திருந்ததாக கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

> பொன்முடி சூடிடும் கனவினை எறிவாய்
> – வா
> புலிகளின் பாசறை, மகிமைகள் பெறுவாய்
> கண்களில் விடுதலை நெருப்பினைக்
> கொழுத்து - போர்
> களத்தினில் ஆடியெம் எதிரியை விழுத்து
>
> (மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்)

மாக அவர்கள் வரமுடியாது விட்டாலும், நாளை இப் பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக் காட்டப்போகின்றோம்.

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்.

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான் தனதுபிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்டகல்லறையைப் பார்த்துஓரளவு ஆறுதலடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்கமுயற்சிப்பதாக இருக்க முடியாதது தானே.

## இன்று

இல் காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரை நல்லூர் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், 9.00 — 10.00 மணி வரை யாழ்ப்பாணம், வேலணை, காரைநகர் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், 10.15 — 11.15 வரை கோப்பாய் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், 11.15 — 12.15 வரை உடுவில் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் மீளளிக்கப்படவுள்ளது. அத்துடன் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் மாலை 3.00 — 4.00 வரை தெல்லிப்பழை, சங்கானை, மானிப்பாய் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் மீளளிக்கப்படவுள்ளது.

வித்தியாலயத்தில் சாவகச்சேரி வட்டப்பொறுப்பாளர் திரு. கோபால் தலைமையிலும் வேம்பொடுகேணி பாடசாலை தேவாலயத்திலும் கிழக்கு வட்டத்தில் நாகர்கோவில் முருகன் கோவிலிலும் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

# இந்து மகளிர் கல்லூரியில் மாவீரர்தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் மாவீரர்தின சிறப்பு நிகழ்ச்சிகள் நாளைசெவ்வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில் கல்லூரி அதிபர் திருமதி ரி. நாகராசா அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதமவிருந்தினராக திரு. வெ. இளங்குமரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக சி. வேலாயுதம் அவர்களும் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

தொடர்ந்து பாடசாலை மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

# மாவீரர் நினைவாக மானிப்பாயில் சிரமதானம்

(மானிப்பாய்)

மாவீரர் வாரத்தையொட்டி வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் செயலாளர் இ. கணேஸ்வரன் தலைமையின் கீழ் சகல உப அலுவலக பொறுப்பதிகாரிகளினதும் ஊழியர்களினதும் ஒத்துழைப்புடன் சிரமதான வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளனர்.

இன்று மானிப்பாய் பிப்பிலிச் சுடலையும் புளியங்கண்டு வீதி, மருவு ஆகியனவும்நாளை (24- 11- 92) அதிகார் செல்லமுத்து வீதி, அந்திமுகாம் சுற்றாடல், கரையாம்பிட்டி சுடுகாடு ஆகியனவும் நாளை மறுதினம் (25 11 92) அதிகார் செல்லமுத்து விளையாட்டரங்கும் சுற்றாடலும், மானிப்பாய் கிராம உப அலுவலக வளவு ஆகியனவும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட உள்ளன.

# திருமலை மாவட்ட மாவீரர் நினைவுகூரல்

மாவீரர் வாரத்தையொட்டி திருக்கோணமலை மாவட்ட மாவீரர்களை நினைவு கூரு

## மாவீரர் விழா

(வட்டுக்கோட்டை)

மாவீரர் விழா யா/வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.00மணியளவில் அதிபர்திரு. வி சிவஞான போதன் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

முகமாக யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 508 மாவீரர்களினதும் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்படுவதுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் பிற்பகலில்கலைநிகழ்ச்சிகளோடும், விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர்களின் முக்கிய உரைகளோடும் நிறைவெய்தும்

ஈழநாதம்

# பிரச்சினைக்கு தீர்வுவரும்வரை தமிழ் அகதிகளை அனுப்பவேண்டாம்

## ஐ. நா. ஸ்தானிகராலயத்திடம் கோரிக்கை

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வு காணப்படும்வரை தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி அமைப்பு ஐ. நா. உயர் ஸ்தானிகர் திருமதி சடக்கோ ஒகட்டாவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதும், தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது தொடர்வதும் திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கிரேக்க நாட்டிலிருந்து 1991 டிசம்பர் 12 இல் நாடு கடத்தப்பட்டு கொழும்பு விமான நிலையத்திற்கு வந்த 13 பேரின் கதி என்ன என்பது பற்றி இதுவரை தெரியாமலிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் இந்தியாவில் இருந்து திரும்பிய சிலர் மகசீன் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும்பலர் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் அகதி முகாமிலேயே உள்ளனர் எனவும்,

இந்நிலையில் இலங்கையில் அமைதி நிலவும் வரை அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்திவைக்க வேண்டுமென இலங்கை, இந்திய அரசுகளை கோருமாறும் அல்லது இலங்கைக்கு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு பொறுப்பை ஏற்குமாறும் ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தை தமிழ் தகவல் நிலையம் கேட்டுள்ளது.

---

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு

# நீர்ப்பாசன திணைக்கள அறிவித்தல்

எனது பிரிவின் கீழ் பராமரிக்கப்படும் கீழ்வரும் குளங்களில் நீர் விநியோக பராமரிப்பு வேலைகளை திறம்படச் செய்விப்பதற்கு அந்தந்தக்குளங்களின் கீழ் விவசாயம் செய்யும் கமக்காரர்கள் அடங்கிய ''கமக்காரக் குழுக்கள்'' [Farmers Organization] தெரிவு செய்யவேண்டி உள்ளதால் தயவு செய்து இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்ட இடங்களிற் கூடி உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| குளத்தின் பெயர் | கூட்டம் நடைபெறும்இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 01. கரியாலை நாகபடுவான் | நீர்ப்பாசன விடுதி பல்லவராயன் கட்டு | 1-12-92 | காலை 9-00 |
| 02. வன்னேரிக் குளம் | நீர்ப்பாசன விடுதி வன்னேரிக் குளம் | 1-12-92 | மாலை 2-00 |

எந்திரி. ந. நவனேசன்
நீர்ப்பாசன எந்திரி,
கிளிநொச்சிப் பிரிவு.

(சி/5452)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

---

## அஞ்சலி

### அமரர் ந. சபாரத்தினம்

ஓய்வு பெற்ற அதிபர்
யாழ். இந்துக் கல்லூரி
1964 – 1971

எம்மிடையே வாழ்ந்த அறிவு மேதை
இந்துவின் மைந்தன்
கல்லூரியின் முன்னாள் அதிபர்
அன்னார் பிரிவு
எமை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது
அன்னார் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி
எமது அஞ்சலியை
சிரம் தாழ்த்தி வழங்குகின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள்,
யாழ்ப்பாணம். மாணவர்கள்.
22 - 11 - 1992 [சி-5453]

---

## கண்ணீரஞ்சலி


### கதிரேசு சின்னம்மா

நாவற்காடு. வரணியைச் சேர்ந்த கதிரேசு சின்னம்மா 21-11-92 சனிக்கிழமை காலமானார். இவர் கந்தன் கதிரேசுவின் (தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க முன்னாள் தலைவர்) அன்பு மனைவியும், இராசேஸ்வரி, நடராசலிங்கம் (குணம், தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க ஊழியர்) ஆகியோரின் அன்பு தாயாரும், முதலி. சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் ஆவார். அன்னாரின் மறைவை யொட்டி எமது அஞ்சலியை செலுத்துகிறோம். இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பணியாளர் சங்கம்,

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்,
கொடிகாமம். (3689)

---



## ''மாவீரர் வார சிந்தனை''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்த மண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்த மண் என்னை வாழவைக்கிறது. எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் எனக்கு சுவையான உணவைத்தந்து என்பசியைத் தீர்த்து வைக்கிறது,''

''தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்''

[சி/5444]

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 22-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6813

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

42-3726, 24-9597, 41-5178, 24-4664, 28-3969, 41-8292, 27 - 7081, 40 - 1714, 42 - 9625, 26 - 6077, 40 - 1214, 26 - 3410, 24 - 1701, 24 - 8603, 24 - 1172, 42 - 2323, 24-7327, 28,-6624, 28-3049, 24-4282, 71-859, 42-5651, 28-1262, 26-1735, 28.1111, 26-4792, 26-6264, 41-8035 27-9661, 24-2496, 42-3945, 26-2391, 28-5294, 26-5814, 28-9677, 24-336, 26-5846, 24-6533, 41-1665, 26-2108, 41-9995, 26-6361, 42-2364, 27-7419, 27-5406, 28-2145, 26-4323, 27-2761

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

41-9530, 41-9556. 24-4707, 27-8575, 28-8037, 28-3051 41-9396, 28-8589, 26-6984, 26-0355

---

## அஞ்சலி

### அமரர் ந. சபாரத்தினம்

முன்னாள் அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

மூதறிஞர், மூத்த அதிபர், இந்துவை முன்னிலைப்படுத்தியவர்களில் முன்னவர் அன்னார் மறைவுக்கு ஆழ்ந்த அஞ்சலி!

22-11-1992 பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
[சி-5454] யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

---

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சபாரத்தினம்


இளைப்பாறிய யாழ். இந்துக்கல்லூரி அதிபரும், முன்னாள் ஈழநாடு ஆசிரியருமான திருவாளர் நமசிவாயம் சபாரத்தினம் 22 - 11 - 92 ஞாயிற்றுக்கிழமை (நேற்று) பிற்பகல் காலமானார். அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், சிவாம்பிகை, டாக்டர் சிவகுமாரன், வாமதேவன், சோமநாதன், ராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் ஜெகதாசன், ஜெகநாயகி, டாக்டர் புவனேஸ்வரி, டாக்டர் கலைவாணி ஆகியோரின் மாமனாரும், தர்ஷினி, அர்ச்சுனா, ஆரணி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (23 - 11 - 92) இன்று காலை 11 மணிக்கு 110, அம்பலவாணர் வீதி, அத்தியடியில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:
110, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
டாக்டர் சிவகுமாரன்

[3687]

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மாங்குளம் இராணுவமுகாம் நேரடிமோதலில் வீரச்சாவடைந்த

## இரண்டாம் லெப். மாரியாச்சி

**[அருள்மொழி (சிந்தனா) குணசிங்கம்]**

மண்ணில் மழலையாய்
**09-12-1963**

மாங்குளத்தில் வரலாறாய்
**23-11-1990**

உயிரை உதறிச் சென்ற
உன் மாண்புமிகு தியாகத்தை
எப்படி மறப்பது சிந்தனா?
ஆண்டு இரண்டோடி விட்டது
உமைப் பிரிந்து நாம் - ஆனாலும்
ஆராதிக்கிறோம் எம் நெஞ்சங்களில்
உம் நினைவுகளை என்றென்றும்.

மாங்குளம் இராணுவமுகாம் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் உட்பட அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்

பாரதிவீதி, யாழ்ப்பாணம். [சி-5451) - குடும்பத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம் பணி' மனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி





## வீரவேங்கை சுதா - சுதனா
## (செல்வரட்ணம் சுதர்மினா)

வீரப்பிறப்பு:
1975. - 03 - 15

வீரச்சாவு:
1990 - 11 - 28

மாங்குளம் சிங்களப்
படைமுகாம் மீதினில்
மறப்போர் புரிந்தனர் புலிகள் — இதில்
வீழ்ந்தது சிங்களம்
வென்றது செந்தமிழ் — அந்த
வெற்றிக்காய் உயிரீந்த
வேங்கைகள் வரிசையில்
தன்னையும் ஒன்றாக்கி
விதைத்தான் எம் சுதனாக்குட்டி

## செல்வரட்ணம் சுதர்சன்
## (சுதன்)

பிறப்பு:
1967-02-25

இறப்பு:
1989-02-15

தேசத் துரோகிகள் கண்ணுக்கு
தெரிந்தது இவள் அண்ணன்
செத்தான் அவர்களின் சூட்டுக்கு — இவள்
சேர்ந்தாள் புலிகளில் போருக்கு
தாயகம் மீட்டிட
ஆயுதம் ஏந்தினாள்
சமரினில் வீழ்ந்துமே
சரித்திரம் ஆகினாள்

உன்பிரிவால் வாடும்

அப்பா, அம்மா, அக்காச்சி, அண்ணாமார்,
அம்மம்மா, மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

மாமுலை, முள்ளியவளை. (5447)